DECEMBER 2022 **P/ID 28512/PCM1A**

Time : Three hours Maximum : 80 marks

SECTION A — ($10 \times 2 = 20$ marks)

Answer Any TEN Questions.

1. What do you mean by Allotment of Shares?
   பங்குகளின் ஒதுக்கீடு என்பதன் மூலம் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

2. Define – Secured Debentures.
   வரையறுக்கவும் – பாதுகாக்கப்பட்ட கடன் பத்திரங்கள்.

3. What is Goodwill?
   நற்பெயர் என்றால் என்ன?

4. Write a short note on Average Capital Employed.
   சராசரி மூலதனம் பற்றி ஒரு சிறு குறிப்பை எழுதவும்.

5. Define – Amalgamation.
   வரையறுத்தல் – ஒருங்கிணைப்பு.

6. What is Trade Liabilities?
   வர்த்தக பொறுப்புகள் என்றால் என்ன?

7. State the objectives of external reconstruction
   வெளிப்புற மறுசீரமைப்பின் நோக்கங்களைக் குறிப்பிடவும்.

8. What do you mean by Preference Dividend?
   முன்னுரிமை ஈவுத்தொகை என்றால் என்ன?

9. What is Consolidated Balance Sheet?
   தொகுக்கப்பட்டு இருப்புநிலைகுறிப்பு என்றால் என்ன?

10. Define – Cash Reserve in Banking Company Accounts.
    வங்கி நிறுவன கணக்குகளில் ரொக்க காப்பு – வரையறுக்கவும்.

11. What is Pure Underwriting?
    ஒப்புறுதி என்றால் என்ன?

12. Point out the factors affecting for valuation of shares.
    பங்குகளின் மதிப்பீட்டைப் பாதிக்கும் காரணிகளைச் சுட்டிக்காட்டுங்கள்.

SECTION B — ($5 \times 6 = 30$ marks)

Answer any FIVE questions.

13. Nalli and Co. Ltd was registered with an authorized capital of Rs. 20,00,000 divided into 20,000 share of Rs. 100 each. The company offered 12,000 shares to the public which were payable : Rs. 20 per share on application, Rs. 40 per share on allotment and Rs. 40 on call. Application for 18,000 shares wee received on which the directors allotted as follows :

Applicants for 10,000 shares – Full

Applicants for 5,000 shares – 2,000 shares

Applicants for 3,000 shares – Nil

The excess application money was adjusted towards allotment. All the money due on allotment and call was fully received. Make the necessary entries in the company's books.

நல்லி நிறுமம் அனுமதிக்கப்பட்ட முதல் ரூ. 20,00,000 த்தை 20,000 பங்குகள் ரூ. 100 வீதம் கொண்டுள்ளது. இந்த நிறுமம் 12,000 பங்குகளை பின்வருமாறு செலுத்த பொது மக்களுக்கு வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ரூ. 20, ஒதுக்கீட்டின் போது ரூ. 40 மற்றும் அழைப்பின் போது ரூ. 40 ம் செலுத்த வேண்டும். 18,000 பங்குகளுக்கான விண்ணப்பம் பெறப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டது.

10,000 பங்குகளுக்கான விண்ணப்பம் – முற்றிலும்

5,000 பங்குகளுக்கான விண்ணப்பம் – 2,000 பங்குகள்

3,000 பங்குகளுக்கான விண்ணப்பம் – இல்லை

மிகுதியான விண்ணப்ப பணம் ஒதுக்கீட்டின் போது சரிசெய்து கொள்ளப்படும். அனைத்து ஒதுக்கீட்டு மற்றும் அழைப்பு தொகை முற்றிலும் பெறப்பட்டது. இந்த நிறும ஏட்டில் தேவையான குறிப்பேட்டு பதிவு தருக.

14. A firm earned net profits during the last three years as follows:

First year	–	Rs. 36,000
Second year	–	Rs. 40,000
Third year	–	Rs. 44,000

The capital investment of the firm is Rs. 1,00,000.

A fair return on the capital, having regard to the risk involved, is 10%. Calculate the value of goodwill on the basis of 3 years' purchase of supper profit.

ஒரு நிறுவனம் கடந்த மூன்று ஆண்டுகளில் ஈட்டப்பட்ட நிகர இலாபம் பின்வருமாறு :

முதல் ஆண்டு – ரூ. 36,000

இரண்டாம் ஆண்டு– ரூ. 40,000

மூன்றாம் ஆண்டு – ரூ. 44,000

இந்த நிறுவனத்தின் மூலதன முதலீடு ரூ. 1,00,000 ஆகும். இந்த மூலதன முதலீட்டின் இடர்பாட்டிற்கு 10% ஆதாயம் எதிர்பார்க்கப்படுகிறது. மிகை இலாபத்தில் மூன்று ஆண்டு கொள்முதல் அடிப்படையில் நற்பெயர் கணக்கிடவும்.

15. T.V. Ltd. went into voluntary liquidation on 30th April 2018 position on that date was as under.

Liabilities	Rs.	Assets	Rs.
Share Capital :		Machinery	80,000
5,000 shares, Rs. 100 each Rs. 80 paidup	4,00,000	Other fixed assets	2,60,000
Loans		Stock	1,05,000
(secured by mortgage of machinery)	1,00,000	Debtors	1,00,000
Unsecured loans	2,00,000	Loans	40,000
		Cash	5,000
		Profit and Loans A/C	1,10,000
	7,00,000		7,00,000

Unsecured loans including preferential dues Rs. 10,000. Machinery was realized by the secured creditors for Rs. 1,20,000. Other fixed assets realized Rs. 40,000, Debtors Rs. 20,000 and Stock Rs. 10,000. Loans were wholly bad. The liquidator was entitled to a fixed remuneration of Rs. 1,000 plus 2% of the amount paid to unsecured creditors. The liquidator's pocket expenses amounted to Rs. 1,000. Show the Liquidator's Statements of account.

ஒரு தன்விருப்ப கலைப்பிற்கு உள்ளான T.V. நிறுமத்தின் ஏப்ரல் 30, 2018 இருப்புநிலை பின்வருமாறு.

பொறுப்புகள்	ரூ.	சொத்துக்கள்	ரூ.
பங்கு முதல் :		இயந்திரம்	80,000
5,000 பங்குகள் ரூ. 100 வீதம் (செலுத்தியது ரூ. 80)	4,00,000	மற்ற நிலை சொத்துக்கள்	2,60,000
கடன்கள்		சரக்கிருப்பு	1,05,000
(இயந்திரம் அடமான பினையமாக)	1,00,000	கடனாளிகள்	1,00,000
பினையமற்ற கடன்கள்	2,00,000	கடன்கள்	40,000
		ரொக்கம்	5,000
		இலாப நட்ட கணக்கு	1,10,000
	7,00,000		7,00,000

பினையமற்ற கடன்களில் முன்னுரிமை கடன் ரூ. 10,000 உள்ளடக்கியது. பினைய கடனீந்தோரால் இயந்திரத்தை ரூ. 1,20,000 க்கு விற்கப்பட்டது. மற்ற நிலை சொத்துக்கள் ரூ. 40,000 க்கும் கடனாளிகள் ரூ. 20,000 க்கும் மற்றும் சரக்கிருப்பு ரூ. 10,000 க்கும் தீக்கப்பட்டது. கடன்கள் முற்றிலும் வராக்கடன் ஆகும். கலைப்பாளருக்கு கழிவாக ரூ. 1,000 மற்றும் பினையமற்ற கடனீந்தோர்களுக்கு செலுத்தும் தொகையில் 2% அளிக்கப்பட வேண்டும். கலைப்பாளரின் கை செலவுத்தொகை ரூ. 1000 ஆகும். கலைப்பாளரின் கணக்கு அறிக்கை தயாரித்து காட்டவும்.

16. From the following Balance Sheet relating to H Ltd. and S Ltd. prepare consolidated Balance Sheet.

Liabilities	H Ltd. Rs.	S Ltd Rs.	Assets	H Ltd. Rs.	S Ltd Rs.
Share Capital (Rs. 10 each)	10,00,000	2,00,000	Sundry Fixed Assets	8,00,000	1,20,000
Profit and Loss A/c	4,00,000	1,20,000	Stock	6,10,000	2,40,000
Reserves	1,00,000	60,000	Debtors	1,30,000	1,70,000
Creditors	2,00,000	1,20,000	Bills Receivable	10,000	–
Bills payable	–	30,000	Shares in 'S Ltd' at cost (15,000 shares)	1,50,000	–
	17,00,000	5,30,000		17,00,000	5,30,000

(a) All profits of S Ltd. have been earned after the shares were acquired by H Ltd. But there was already a reserve of Rs. 60,000 on that date.

(b) All the bills payable of S Ltd were accepted in favour of H Ltd.

(c) The stock of H Ltd. includes Rs. 50,000 purchased from S Ltd. The profit added was 25% on cost.

H நிறுமம் மற்றும் S நிறுமத்தின் பின்வரும் இருப்பு நிலைக் குறிப்பு கொண்டு தொகுப்பு இருப்பு நிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

பொறுப்புகள்	H நிறுமம் ரூ.	S நிறுமம் ரூ.	சொத்துக்கள்	H நிறுமம் ரூ.	S நிறுமம் ரூ.
பங்கு முதல் (ரூ. 10 வீதம்)	10,00,000	2,00,000	பற்பல நிலை சொத்து	8,00,000	1,20,000
இலாப நட்ட கணக்கு	4,00,000	1,20,000	சரக்கிருப்பு	6,10,000	2,40,000
காப்புகள்	1,00,000	60,000	கடனாளிகள்	1,30,000	1,70,000
கடனீந்தோர்கள்	2,00,000	1,20,000	பெ.மா.சீட்டு	10,000	–
செ.மா.சீட்டு	–	30,000	'S நிறுமத்தின் பங்குகள் (15,000 பங்குகள்)	1,50,000	–
	17,00,000	5,30,000		17,00,000	5,30,000

(அ) S நிறுமத்தின் அனைத்து இலாபங்களும் H நிறுமத்தால் பங்குகளை கைப்பற்றிய பிறகு ஈட்டியது ஆகும். ஆனால் ஏற்கனவே அந்த தேதியன்று ரூ. 60,000 காப்பு இருந்தது.

(ஆ) S நிறுமத்தின் அனைத்து செலுத்துவதற்குரிய மாற்று சீட்டும் H நிறுமத்தின் சாதாகமாக ஏற்கப்பட்டதாகும்.

(இ) H நிறுமத்தின் சரக்கிருப்பில் ரூ. 50,000 மதிப்புள்ளது S நிறுமத்திடம் கொள்முதல் செய்யப்பட்டதாகும். அது அடக்க செலவுடன் 25% இலாபம் கூட்டியது ஆகும்.

17. From the following particulars, prepare a profit and loss account of New Bank Ltd, for the year ended 31.12.1996

Particulars	Rs.	Particulars	Rs.
Interest on loans	2,60,000	Interest on Cash Credits	2,25,000
Interest on fixed deposits	2,80,000	Rent and Taxes	20,000
Rebate on bills discounted	50,000	Interest on Overdrafts	56,000
Commission charged to customers	9,000	Directors and Auditor Fees	4,500
Establishment on Expense	56,000	Interest on saving bank A/c	70,000
Discount on bills discounted	2,00,000	Postage and telegrams	1,500
Interest on current accounts	45,000	Sundry charges	1,800
Printing and Advertisement	3,000		

பின்வரும் விபரங்களிலிருந்து நியூ வங்கி நிறுமத்தின் இலாப மற்றும் நட்ட கணக்கை (31.12.1996 வரையனது) தயாரிக்கவும்.

விபரங்கள்	ரூ.	விபரங்கள்	ரூ.
கடன்கள் மீது வட்டி	2,60,000	ரொக்க கடன் மீதான வட்டி	2,25,000
நிலை வைப்பு மீது வட்டி	2,80,000	வாடகை மற்றும் வரி	20,000
சீட்டு தள்ளுபடி மீதான ஒதுக்கு	50,000	மேல்வரைப்பற்று மீதான வட்டி	56,000
வாடிக்கையாளர்க்கு சேர்த்த கழிவு	9,000	இயக்குநர் மற்றும் தணிக்கக்கட்டனம்	4,500
தேற்றுவிப்பு செலவுகள்	56,000	சேமிப்பு வங்கி க/கு மீதான வட்டி	70,000
சீட்டு தள்ளுபடி மீதான வட்டம்	2,00,000	தபால் மற்றும் தந்தி	1,500
நடப்பு கணக்கு மீதான வட்டி	45,000	பற்பல செலவுகள்	1,800
அச்சு மற்றும் விளம்பரம்	3,000		

18. The life fund of a life insurance company on 31-12-2018 showed a balance of Rs. 54,00,000. However, the following items were not taken into account while preparing the revenue A/c for 2018: From the following information calculate true life fund.

		Rs.
(a)	Interest and dividends accrued on investments	20,000
(b)	Income tax deducted at source on the above	6,000
(c)	Reinsurance claims recoverable	7,000
(d)	Commission due on reinsurance premium paid	10,000
(e)	Bonus in reduction of premiums	3,000

ஒரு ஆயுள் காப்பீட்டு நிறுமத்தின் ஆயுள் நிதி 31.12.2018 அன்று ரூ. 54,00,000 இருப்பு காட்டியது. எப்படியிருந்தாலும், 2018 ம் ஆண்டிற்கான வருவாயின கணக்கு தயாரிக்கும்போது பின்வரும் இனங்களை கருத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. பின்வரும் தகவலிருந்து சரியான ஆயுள் நிதி கணக்கிடவும்.

		ரூ.
(அ)	முதலீட்டின் மீது வட்டி மற்றும் பங்காதாயம் சேர்ந்தது	20,000
(ஆ)	மேல் உள்ளவைக்கு வருவாயிடத்தில் வருமான வரி கழிப்பு	6,000
(இ)	மறுகாப்பீட்டு கோரல் மீட்பு	7,000
(ஈ)	மறுகாப்பீட்டு முனைமம் செலுத்தியது மீது கழிவு நிலுவை	10,000
(உ)	முனைம குறைப்பில் வெகுமதி	3,000

19. State the difference between Amalgmation and Absorption.

ஒன்றினைப்பு மற்றும் நிர்ம ஈப்புக்கும் இடையேயான வேறுபாடுகளை தெரிவி.

SECTION C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions

20. Janata Ltd issued 40,000 shares which were underwriting as follows.

A – 24,000 shares B – 10,000 shares and C – 6,000 shares

The underwriters made applications for firm underwriting as under :

A – 3,200 shares, B – 1,200 shares and C – 4,000 shares. The total subscription excluding firm underwriting, but including marked applications were 20,000 shares. Marked applications were :

A – 4,000 shares, B – 8,000 shares and C – 2,000 shares. Show the allocation of liability of underwriters.

ஜனதா நிறுமம் 40,000 பங்குகளை கீழ்கண்டவாறு ஒப்புறுதி செய்து வெளியிட்டது.

A – 24,000 பங்குகள் B – 10,000 பங்குகள் மற்றும் C – 6,000 பங்குகள்

ஒப்புறுதியளாரால் உருவாக்கப்பட்ட விண்ணப்பம் கீழ்கணுமாறு அமைந்துள்ளது.

A – 3,200 பங்குகள், B – 1,200 பங்குகள் மற்றும் C – 4,000 பங்குகள். மொத்தமாக பெறப்பட்ட பங்கு விண்ணப்பம் 20,000 த்தில் குறியீடு செய்த விண்ணப்பம் உட்பட ஆனால் நிறும விண்ணப்பம் தவிர உள்ளதாகும். பின்வருமாறு குறியீட்டு விண்ணப்பம் உள்ளது. A க்கு 4000 பங்குகள், B க்கு 8,000 பங்குகள் C க்கு 2,000 பங்குகள். ஒப்புறுதியாளரின் பொறுப்புகளை கணக்கிட்டு காட்டுக.

21. The balance sheet of Sarashwathi Ltd disclosed the following position as on 31st December 1998.

Liabilities	Rs.	Assets	Rs.
Share Capital		Goodwill	1,65,000
6,000 Eq. Shares of Rs. 100 each	6,00,000	Investment	5,25,000
Profit and Loss A/c	75,000	Stock	6,60,000
General Reserve	2,25,000	Sundry Debtors	3,90,000
6% Debentures	4,50,000	Cash at Bank	60,000
Sundry Creditors	1,50,000		
Workman Savings bank A/c	3,00,000		
	18,00,000		18,00,000

(a) The profits for the past five years were: 1994 - Rs. 30,000; 1995 - Rs. 70,000; 1996 - Rs. 50,000; 1997 - Rs. 55,000 and 1998 - Rs. 95,000.

(b) The Market value of investments was Rs. 3,30,000.

(c) Goodwill is to be valued at three years purchase of average annual profits for the last five years. Find out the intrinsic value of each share.

சரஸ்வதி நிறுமத்தின் இருப்பு நிலைக்குறிப்பு பின்வரும் நிலைமையை டிசம்பர் 31, 1998 அன்று காட்டியது.

பொறுப்புகள்	ரூ.	சொத்துக்கள்	ரூ.
பங்கு முதல்		நற்பெயர்	1,65,000
6,000 சமநிலை பங்குகள் ரூ. 100 வீதம்	6,00,000	முதலீடுகள்	5,25,000
இலாப மற்றும் நட்ட க/கு	75,000	சரக்கிருப்பு	6,60,000
பொது காப்பு	2,25,000	பற்பல கடனாளிகள்	3,90,000
6% கடனீட்டு பத்திரம்	4,50,000	வங்கி வச ரொக்கம்	60,000
பற்பல கடனீந்தோர்கள்	1,50,000		
பணியாளர் சேமிப்பு வங்கி க/கு	3,00,000		
	18,00,000		18,00,000

(அ) கடந்த ஐந்தாண்டு இலாபங்கள் பின்வருமாறு :

1994 – ரூ. 30,000; 1995 – ரூ. 70,000; 1996 – ரூ. 50,000; 1997 – ரூ. 55,000 மற்றும் 1998 - ரூ.95,000.

(ஆ) முதலீடுகளின் சந்தை மதிப்பு ரூ. 3,30,000.

(இ) கடந்த ஐந்தாண்டு சராசரி இலாபத்தில் மூன்று ஆண்டு கொள்முதல் அடிப்படையில் நற்பெயர் கணக்கிடப்பட வேண்டும். ஒவ்வொரு பங்கின் நிகர (intrinsic) மதிப்பை கணக்கிடுக.

22. M Ltd and N Ltd agreed to amalgamate on the basis of the following balance sheet as on 31-3-2017.

Liabilites	M Rs.	N Rs.	Assets	M Rs.	N Rs.
Share Capital			Goodwill	30,000	-
Rs. 25 each	75,000	50,000	Fixed Assets	31,500	38,800
P and L A/c	7,500	2,500	Stock	15,000	12,000
Creditors	3,500	3,500	Debtors	8,000	5,200
Depreciation Fund	-	2,500	Bank	1,500	2,500
	86,000	58,500		86,000	58,500

The assets and liabilities are to be taken over by a new company formed called P Ltd at book values. P Ltd's capital is Rs. 2,00,000 divided into 10,000 equity shares of Rs. 10 each and 10,000 9% preference shares of Rs. 10 each P Ltd issued. The equity shares equity to the vendor companies and preferences shares were issued for any balance of purchase price. Pass journal entries in the books of P Ltd. And prepare its balance Sheet.

M நிறுமம் மற்றும் N நிறுமம் ஒருங்கிணைப்பு செய்து கொள்ள 31.3.2017 வரையான இருப்பு நிலைக்குறிப்பை அடிப்படையாக கொண்டுள்ளது.

பொறுப்புகள்	M ரூ.	N ரூ.	சொத்துக்கள்	M ரூ.	N ரூ.
பங்கு முதல்			நற்பெயர்	30,000	-
ரூ. 25 வீதம்	75,000	50,000	நிலை சொத்துக்கள்	31,500	38,800
இலாப மற்றும் நட்ட க/கு	7,500	2,500	சரக்கிருப்பு	15,000	12,000
கடனீந்தோர்கள்	3,500	3,500	கடனாளிகள்	8,000	5,200
தேய்மான நிதி	-	2,500	வங்கி	1,500	2,500
	86,000	58,500		86,000	58,500

இந்த சொத்துகளும் பொறுப்புகளும் புதியதாக நிறுவப்பட்ட P நிறுமம் ஏட்டு மதிப்பில் எடுத்துக் கொண்டது. P நிறுமத்தின் மூலதனம் ரூ. 2,00,000 த்தை 10,000 சமநிலைப் பங்குகளை ரூ. 10 வீதமும் 10,000, 9% முன்னுரிமைப் பங்குகளை ரூ. 10 வீதம் P நிறுமம் கொண்டுள்ளது. இந்த சமநிலைப் பங்குகளை விற்பனை நிறுமத்திற்கு சமமாக கொடுக்கப்பட்டது. கொள்முதல் விலையில் பற்றாக்குறை இருப்பின் முன்னுரிமைப் பங்குகள் கொடுக்கப்படும். P நிறுமத்தின் ஏடுகளில் குறிப்பேட்டு பதிவு தந்து அதன் இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

23. From the Balance Sheets given below prepare a consolidated Balance Sheet of A Ltd and its subsidiary B Ltd.

Balance Sheet as on 30th June 2014

Liabilities	A Ltd. Rs.	B Ltd. Rs.	Assets	A Ltd. Rs.	B Ltd. Rs.
Share Capital			Land and Building	6,40,000	2,00,000
(Shares of Rs. 10 each)	25,00,000	6,00,000	Machinery	12,60,000	3,40,000
General Reserve	3,60,000	1,20,000	Furniture	1,40,000	60,000
P and L A/c	2,40,000	1,80,000	40,000 shares in B Ltd.	5,00,000	-
Trade Creditors	3,50,000	1,00,000	Stock	4,10,000	2,50,000
			Debtors	3,80,000	1,00,000
			Bank	1,20,000	50,000
	34,50,000	10,00,000		34,50,000	10,00,000

At the date of the acquisition by A Ltd. of its holding of 40,000 shares in B Ltd. the latter company had undistributed profits and reserves amounting to Rs. 1,00,000 none of which has been distributed since then.

கீழே கொடுக்கப்பட்டுள்ள இருப்புநிலைக் குறிப்புகளிலிருந்து A நிறுமம் மற்றும் அதன் துணை நிறுமம் B யின் தொகுப்பு இருப்பு நிலைக்குறிப்பு தயார் செய்க.

30.6.2014 க்கான இருப்பு நிலை குறிப்பு

பொறுப்புகள்	A லிட் ரூ.	B லிட் ரூ.	சொத்துக்கள்	A லிட் ரூ.	B லிட் ரூ.
பங்கு முதல்			நிலம் மற்றும் கட்டிடம்	6,40,000	2,00,000
ரூ. 10	25,00,000	6,00,000	இயந்திரம்	12,60,000	3,40,000
பொது காப்பு	3,60,000	1,20,000	அறைகலன்	1,40,000	60,000
இலாப நட்ட க/கு	2,40,000	1,80,000	40,000 பங்குகள் (B லிட்)	5,00,000	-

பொறுப்புகள்	A லிட் ரூ.	B லிட் ரூ.	சொத்துக்கள்	A லிட் ரூ.	B லிட் ரூ.
வியாபார கடனீந்தோர்	3,50,000	1,00,000	சரக்கிருப்பு	4,10,000	2,50,000
			கடனாளிகள்	3,80,000	1,00,000
			வங்கி	1,20,000	50,000
	34,50,000	10,00,000		34,50,000	10,00,000

A நிறுமத்தால் கையகப்படுத்திய தேதியன்று B நிறுமத்தின் 40,000 பங்குகள் வாங்கப்பட்ட போது B நிறுமத்தில் பகிர்ந்தளிக்கப்படாத இலாபம் மற்றும் காப்புத் தொகை ரூ. 1,00,000 இன்னும் பகிர்ந்தளிக்கப்படவில்லை.

24. State the difference between Insurance and Reinsurance.

காப்பீடு மற்றும் மறுகாப்பீட்டுக்கு இடையே உள்ள வேறுபாட்டைக் குறிப்பிடவும்.